SURESH' IAS ACADEMY



# 19.06.2026 செய்திகள்

## பிப்.28 தாக்குதல் முதல் ஜூன் 18 ஒப்பந்தம்

» பிப்ரவரி 28

- ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நாட்டு கூட்டுப் படைகள் போரைத் தொடங்கின. ஈரான் தலைநகரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் அந்நாட்டின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி மற்றும் பல முக்கிய ராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டனர். மினாப் நகரில் பள்ளிக்கூடம் தாக்கப்பட்டதில் 120 குழந்தைகள் உள்பட 156 பேர் கொல்லப்பட்டனர்.

» மார்ச் 1

- ஈரான் பதிலடித் தாக்குதலாக பிராந்தியத்தில் அமெரிக்க ராணுவத் தளங்கள் உள்ள நாடுகள் மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீது வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியது.

» மார்ச் 2

- ஈரானுக்கு ஆதரவாக வடக்கு இஸ்ரேலில் ஏவுகணைகளை வீசி, லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினர் இந்த மோதலில் இறங்கினர்.

» மார்ச் 4

- இந்தியாவில் சர்வதேச கடற்படை அணிவகுப்பில் பங்கேற்றுவிட்டு, நாடு திரும்பிக் கொண்டிருந்த ஈரான் போர்க் கப்பலை இலங்கை கடல் எல்லைக்கு அருகே அமெரிக்கா தாக்கி அழிந்தது. இதில் 104 வீரர்கள் கொல்லப்பட்டனர் அல்லது மாயமாகினர்.

SURESH'

» மார்ச் 9

- ஈரானின் புதிய தலைமை மதகுருவாக அயதுல்லா மோஜ்தபா கமேனி பொறுப்பேற்றார்.

» மார்ச் 17

- அமெரிக்கா–இஸ்ரேல் தாக்குதல்களில் ஈரானின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலர் அலி லாரிஜானி கொல்லப்பட்டார்.

» மார்ச் 18

- ஈரான் உளவுத்துறை அமைச்சர் இஸ்மாயில் காதிப் கொலை செய்யப்பட்டார்.

» மார்ச் 21

- ஈரானின் ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்ததையடுத்து, ஏற்கெனவே ஏற்றுமதி செய்யப்பட்ட ஈரான் எண்ணெய்யின் விற்பனைக்கான தடைகளை அமெரிக்கா தற்காலிகமாக நீக்கியது.

» ஏப்ரல் 8

- அமெரிக்காவும் ஈரானும் 2 வார கால போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டன.

» ஏப்ரல் 11

- அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமையிலான குழு, ஈரானின் உயர்நிலை பேச்சுவார்த்தையாளர்களுடன் பாகிஸ்தானில் நேரடிப் பேச்சுவார்த்தையை நடத்தியது. உடன்பாடு எட்டப்படாத சூழலில், ஈரான் துறைமுகங்களுக்கு எதிரான கடல்வழி முற்றுகையை அமெரிக்க கடற்படை தொடங்கியது.

» ஏப்ரல் 17

- ஹோர்முஸ் நீரிணை திறக்கப்பட்டு, மறுநாளில் மீண்டும் மூடப்பட்டது.

» ஏப்ரல் 21

- அமெரிக்காவின் பேச்சுவார்த்தைகளுக்கு ஈரான் பதிலளிக்காததால், 2-ஆம் கட்ட பேச்சுவார்த்தைக்காக துணை அதிபர் ஜே.டி.வான்ஸின் இஸ்லாமாபாத் பயணம் நிறுத்தி வைக்கப்பட்டது.

» ஏப்ரல் 22

- ஈரானுடனான போர் நிறுத்தத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் கால வரையின்றி நீட்டித்தார்.

» மே 4

- ஹோர்முஸ் நீரிணை வழியாக கடந்து செல்லும் கப்பல்களுக்குப் பாதுகாப்பளிக்கும் புராஜெக்ட் ஃப்ரீடம் திட்டம் தொடங்கப்பட்டு 2 நாள்களில் நிறுத்தப்பட்டது.

» ஜூன் 8

- இஸ்ரேலும் ஈரானும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தியதால் மீண்டும் முழு அளவிலான போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டது.

» ஜூன் 10

- ஈரான் ட்ரோனுடன் மோதி அமெரிக்க ராணுவ ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதற்கு, ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.

» ஜூன் 15

- அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இரு நாடுகளுக்கிடையேயான போர் முடிவுக்கு வந்ததாகவும் அதிபர் டிரம்ப் முறைப்படி அறிவித்தார்.

» ஜூன் 18

- 3 மாதங்களுக்கு மேல் நீடித்த இப்போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி ஒப்பந்தம் அமெரிக்கா, ஈரான் அதிபர்களால் மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்டது.

## ஒத்துழைப்புக் கூட்டாட்சி சாத்தியமாகுமா?

- இந்திய அரசமைப்பானது கூட்டாட்சி அமைப்பைக் கொண்டிருந்தாலும், அது அமெரிக்காவைப் போன்று "மாகாணங்களால் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி" அல்ல; மாறாக தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கும் நோக்கில் வலுவான மத்திய அரசைக் கொண்ட கூட்டாட்சியாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 1-இல் 'Union of States' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

SURESH' IAS ACADEMY

- அதாவது, இந்தியா என்பது மாநிலங்களின் ஒருங்கிணைப்பு (Union) ஆகும். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எந்த இடத்திலும் 'Federation of States' என்று குறிப்பிடப்படவில்லை.

- இதுவே அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு. ஆனாலும் டாக்டர் அம்பேத்கர், "இந்திய அரசமைப்பானது கூட்டாட்சி அமைப்பைக் கொண்டதுதான். ஏனெனில், அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன" என்றார்.

» கூட்டாட்சித் தத்துவம்

- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதி பதினொன்று (XI) என்பது இந்தியக் கூட்டாட்சியின் (Federalism) மையப்புள்ளியாக அரசியல் நோக்கர்களால் கருதப்படுகிறது. இது மத்திய அரசுக்கும் (Union) மாநில அரசுகளுக்கும் (States) இடையிலான அதிகாரப் பகிர்வு, சட்டம் இயற்றும் அதிகாரம், நிர்வாக உறவு, மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறது.

- அரசமைப்புச் சட்டத்தின் 7 ஆவது அட்டவணையானது. மத்தியப் பட்டியல் (Union List), மாநிலப்பட்டியல், பொதுப் (ஒருங்கிணைந்த) பட்டியல் (Concurrent List) என அதிகாரங்களை மூன்று பட்டியல்களாகப் பிரிக்கிறது.

- அதாவது மத்தியப் பட்டியலில் கண்டுள்ள அம்சங்கள் (பொருள்) குறித்து நாடாளுமன்றம் மட்டுமே சட்டம் இயற்றலாம். மாநிலப் பட்டியலில் கண்டுள்ள அம்சங்கள் குறித்து மாநிலச் சட்டமன்றங்கள் சட்டம் இயற்றும். ஆனால், பொதுப் பட்டியலில் கண்டுள்ள அம்சங்கள் குறித்து மத்திய அரசும் சட்டம் இயற்றலாம். இந்த அதிகாரம்தான் இந்தியக் கூட்டாட்சியின் அடிப்படைத் தூணாகக் கருதப்படுகிறது.

- ஆனாலும் கொடுத்துப் பறித்துக் கொண்டதைப் போல, அதில் சில பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளதுதான் "கூட்டாட்சி" என்கிற தத்துவத்துக்கு முரணாக இருக்கிறது.

» அசாதாரண நிலைமை

- அரசமைப்பு நிர்ணய அவை (Constituent Assembly) அரசமைப்பை உருவாக்கியபோது தேசப்பிரிவினை, மதக் கலவரங்கள் என இந்தியா மிகவும் அசாதாரண சூழ்நிலையில் இருந்தது. இந்தச் சூழல்தான் இந்தியக் கூட்டாட்சியின் (Federalism) வடிவத்தை நிர்ணயம் செய்தது.

- அரசியல் நிர்ணய அவையின் உறுப்பினர்கள் பலர் அதில் சுயாட்சி உள்ள மாநிலங்கள் எதிர்காலத்தில் தேச ஒற்றுமை க்கும் ஆபத்தாக அமையக்கூடும் என்று அஞ்சினர்.

- இந்தியா ஒற்றுமையாக நிலைத்திருக்க வலுவான மத்திய அரசு அவசியம் என்று டாக்டர் அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்றவர்கள் கருதினர். அரசமைப்புச் சட்டக்கூறுகள் 256, 257 ஆகியவற்றின்படி நாடாளுமன்றச் சட்டங்கள் அரசமைப்புக்கு ஏற்பச் செயல்படுத்தப்பட வேண்டும்.

- இது குறித்து மத்திய அரசு மாநிலங்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கலாம். அதேநேரம், மாநிலங்கள் தங்களது நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, மத்திய அரசின் அதிகாரத்துக்குத் தடங்கலாக இருக்கக்கூடாது. இத்தகைய கட்டுப்பாடு மாநில அரசின் அதிகாரத்தைக் குறைக்கும் செயல் என்பது எதிர்க் குரலாகவும் தேசிய அளவில் ஒரே மாதிரியான நிர்வாகம் தேவை என்பது ஆதரவுக் குரலாகவும் ஒலிப்பதை அறிய முடிகிறது.

- குறிப்பிடும்படியாக அரசமைப்புச் சட்டத்தில் மத்திய அரசின் நிர்வாகப் பணிகளை மாநிலங்களுக்கு ஒப்படைப்பதற்கும், மாநிலங்கள் சில நிர்வாகப் பணிகளை மத்திய அரசிடம் ஒப்படைப்பதற்கும் வழிவகை உள்ளது. இது ஒத்துழைப்புக் கூட்டாட்சிக்கு எடுத்துக்காட்டாகவும் இருக்கிறது.

- குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் மோதலுக்கு வழிவகுத்து விடுகின்றன. குறிப்பாக, நதிநீர்த் தகராறு போன்ற பிரச்சனைகளைத் தீர்க்கத் தீர்ப்பாயங்கள் (Tribunals) அமைக்க நாடாளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

- குடியரசுத் தலைவர் அதற்கென மாநிலங்களிடை கவுன்சிலை (Inter-State Council) அரசமைப்புச் சட்டக்கூறு 263இன் படி அமைக்கலாம். இதுவே கூட்டுறவுக் கூட்டாட்சியின் முக்கிய முகம்.

- 1950-67 காலக்கட்டத்தில் ஒரே கட்சி பெரும்பாலான மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சி செய்த நிலையில் மோதல்கள் தவிர்க்கப்பட்டன. மாநிலக் கட்சிகள் வலுப்பெற்ற பின்னர் ஒவ்வொரு மாநிலமும் தங்களது மாநில உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது, மத்திய அரசின் தலையீடு தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

» கூட்டுறவுக் கூட்டாட்சி

- அரசமைப்பு நிர்ணய அவையில் எழுந்த அடிப்படைக் கேள்வியே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொண்ட கூட்டாட்சியா அல்லது மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் கொண்ட கூட்டாட்சியா என்பதே ஆகும். மாநில சுயாட்சியை வலியுறுத்தியவர்கள் இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்க அதிகாரப் பரவல் அவசியம் என்கின்றனர்.
- வலுவான மத்திய அரசை ஆதரித்தவர்கள் இந்தியா ஒற்றுமையாக நிலைத்திருக்க வலுவான மத்திய அரசு அவசியம் என்கின்றனர். மாநிலக் கட்சிகள் வலுப்பெற ஆரம்பித்தவுடன் மாநில சுயாட்சி, வரிவிதிப்பு, நிதி ஆதாரங்கள், நிதி பகிர்வு, மத்திய அரசின் தலையீடு பற்றிய விவாதங்கள் அதிகரித்தன.
- அன்றைய அசாதரண சூழலில் அரசமைப்பு நிர்ணய அவை உறுப்பினர்கள் தவிர்க்க முடியாமல் கூட்டாட்சிக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்தார்களே தவிர, மாநிலங்கள் பாதிக்கப்படும் அளவுக்குத் தடை எதுவும் செய்யவில்லை.
- தற்போதைய நிலைமை அப்படி அல்ல. ஏற்கெனவே இருந்த திட்டக்குழு, தற்போது நிதி ஆயோக் என்கிற அமைப்பாக ம ாற்றப்பட்டு விட்டது.
- திட்டக்குழுவில் எல்லா மாநிலங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு, மாநிலங்கள் வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டன.
- ஆனால் தற்போதுள்ள நிதி ஆயோக் அமைப்பில் மத்திய அரசின் விருப்பமே முடிவாக இருக்கும்படி மாற்றப்பட்டு விட்டது. 2017இல் உருவான ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டுறவுக் கூட்டாட்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்று சொல்லப்பட்டாலும், ம ாநிலங்களின் வரிவிதிப்புச் சுதந்திரம் பறிபோய்விட்டது என்கிற விமர்சனமும் உண்டு.
- மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி, 1975-77 காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலையின்போது பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது இன்றுவரை விமர்சிக்கப்படுகிறது.

» கருத்தொற்றுமை

- மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வில் ஏற்றத்தாழ்வு, அதிகாரமிக்க நிதி ஆயோக், ஜி.எஸ்.டி.யின் தாக்கம், மாநிலப் பட்டியலில் மீண்டும் கல்வி, தேசியக் கல்விக்கொள்கை, மும்மொழிக் கொள்கை போன்ற முக்கிய அம்சங்களில் கருத்தொற்றுமை ஏற்படாமை தொடர்வதற்கு அதிகார மையப்படுத்தலே காரணமாகச் சொல்லப்படுகிறது. எனவேதான் கருத்தொற்றுமையின் அவசியம் முக்கியத்துவம் பெறுகிறது.
- கூட்டுறவுக் கூட்டாட்சி (Co-operative Federalism) வலுப்பெற வேண்டுமெனில், மத்திய அரசும் மாநில அரசுகளும் இணைந்து செயல்பட வேண்டும். இதற்கு இரண்டு தரப்பிலும் ஒத்துழைப்பு அவசியம். இது குறித்து ஏற்கனவே அமை க்கப்பட்ட பல ஆணையங்களின் கருத்துகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.
- 1983இல் அமைக்கப்பட்ட சர்க்காரியா ஆணையம், வலுவான மத்திய அரசு அவசியம்; மாநிலங்களுடனான ஆலோசனை அதிகரிக்க வேண்டும் என்கிறது. 2007 இல் அமைக்கப்பட்ட பூஞ்சி ஆணையம் கூட்டுறவுக் கூட்டாட்சி (Co-operative Fedealism) வலுப்படுத்தப்பட வேண்டும் என்கிறது.
- ராஜமன்னார் குழுவின் அறிக்கை (1969) ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும், அது கூட்டாட்சி பற்றிய விவாதத்தை நாடு முழுவதும் உருவாக்கியது.
- இந்தியா ஒன்றுபட்ட நாடாக இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து எதுவும் இருக்க முடியாது. ஆனால், அந்த ஒற்றுமை அதிகார மையப்படுத்தலால் மட்டும் அல்ல; மாநிலங்களின் சம்மதம், பங்களிப்பால் உருவாக வேண்டும் என்பதே பிரச்சனைகளுக்கான தீர்வாக இருக்க முடியும்.